*Editor's Note*

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star', UDUVIL, CHUNNAKAM

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 143 JAFFNA, FRIDAY, 5 & 12th AUGUST, 1983 No. 31 & 32

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland: Rs. 35/- per year.

FOR ADVERTISEMENTS

*Apply to:*

**The Manager,**

'Morning Star', Vaddukoddai.

## Ourselves

All news and other matter published in *the Morning Star* have been approved by the Competent Authority.

— EDITOR.

## The Rehabilitation of property and Industrial Authority (REPIA) — a Clarification

According to Dr. Douglas Liyanege, Secretary to the Minister of State, the REPIA instituted by the goverement after the riots was not interested in getting hold of all houses damaged by the recent disturbances but was only trying to prevent social ills such as the eviction of tenants by landlords and tenants taking illegal measurers against landlords. The Authority will not in any way interfere with the restoration and repair of houses that may take place.

The Authority also will not interfere with the industrial climate of the country. If any industries were able to carry out the repairs by themselves, the authorities will not force its resources on them.

The goveroment's concern for the restoration of property damaged and those industrial and commercial property that would be vested in the government would be those that came within the description "not damage property" or "affected industries".

The Authority had power to take over such properties, rehabitate, restore and even continue to own it. The government in the next few days will issue guide lines on how this law would funtion.

## Special Envoy to India

Mr. H. W. Jeyawardene, Q.C., brother of Sri Lanka's President is currently in New Delhi on a three day visit to have talks with the Indian Prime Minister on the situation in Sri Lanka, following the recent riots over which India had expressed concern. He is expected to arrive today (12-8-83).

India has sent three ships to transport Tamil refugees to the North and also flew in earlier food and medical supplies. The *S. S. Chithamparam* arrived on 10-7-83 at Kankesanthurai with 1200 refugees.

## Drop Elam to be MPs

President J. R. Jeyawardene told the government parliamentary group that TULF members of Parliament would have to abandon the *Eelam* Policy if they wished to continue as MPs. Any future discussions with them too would be on the basis that they had dropped the *Eelam* policy, he said.

[CND 11-8-83]

## Emergency Relief for Sri Lanka

The US Agency for International Development's Office of Foreign Disaster Assistance has offered an extensive package of commodities to meet the needs of displaced persons. The package includes 1000 large family size tents 500 rolls of heavy reinforced plastic sheeling for the construction of temporary shelters, 10,000 cotton blankets and 2000 plastic five gallon water containers. The package is worth some 1.5 million dollars.

The total of Australia's contribution for Emergency Relief in Sri Lanka is 175,000 Australian dollars equivalent to Rs. 3,500,000. The UNICEF aid in drugs, tents, clothes totalled almost 3 million.

In addition to the emergency supplies rushed earlier, the Indian Ship *M. V. Chithambaram* has brought 56 tons of food, clothing, medicine etc., for refugees. These were handed over at Elizabeth Quay by the Indian High Commissioner in Ceylon to the Commissioner General of Essential Services, Mr. Bradman Weerakoon.

Switzerland has gifted 20 tons of milk food.

## Transfer of Houses after July 24

The Government, it is learnt, will soon invalidate by law, all negotiations for the sale or transfer of houses and property to parties other than the original tenants or occupants displaced by the recent spate of violence in the country.

It will also be an offence for owners to unlawfully remain in the premises earlier occupied by tenants displaced after the incidents of July 24 and after.

The Government will make mandatory for every house or property owner to give peaceful possession of vacant premises to former occupants if and when they wished to return.

### *IN BRIEF*

- *The total number of civilian deaths* in the country reported to the Police since July 24, is 316.
- *According to Dr. Wickrema-Weerasooriya* the Secretary to the Ministry of Plan Implementation, at the height of the troubles there were 80 to 90,000 refugees in 18 camps in Colombo and 35 to 40,000 in the 15 camps in the outstations. There were only 40 Indian citizens affected and they were put in a special camp at St. Thomas' College Mt. Lavinia of there were also about 1000 who were of Indian origin but without Indian citizenship in various camps.

## ST. JOHN'S COLLEGE, & CHUNDIKULI GIRL'S COLLEGE, JAFFNA

## ADMISSION — 1984

1. Vacancies ONLY in the following Grades:
   St. John's College, Jaffna: Grades: ONE, SIX & NINE.
   Chundikuli Girl's College, Jaffna: Grades: ONE, THREE, SIX & NINE.
2. Children born between 01-02-78 and 31-01-79 only will be considered for admission to Grade — One (L.K.G.) (Birth Certificate should be annexed along with the application).
3. Pupils to be considered for admission to Grades THREE, FOUR, SIX and NINE should be below the age of nine, ten, twelve and fifteen respectively as on 31-1-1984.
4. Apply before 10th September on forms available from the 1st of September 1983.
5. Please send stamped addressed long envelope and Postal Order for Rs. 20/- per form.
6. Admission Test (for Grade 3, 4, 6 & 9 only) at 8.30 on Saturday 8th October, 1983.
7. A passport size photograph certified by the Principal of the present School must be produced at the admission test.
8. Time-table for the admission test will be issued with the application form.
9. Scholarships available for pupils who do exceptionally well at the admission test.
10. Applicants will be informed of the result — no personal calls please.

**Principals.**

*Jaffna College*

## Annual Inter-House Athletic Meet

The Annual Inter-House Athletic Meet of Jaffna College was held on the 2nd July, 1983 at 2.00 p. m. on the Bicknell grounds under the distinguished partronage of Dr. P. Ratnasabapathy a distinguished old boy and the retired Superintendent of Health Services, Jaffna and Mrs. Ratnasabapathy who distributed the certificates and trophies. Hasting House (Reds) emerged champions. Four new records were created. G. J. Jesurajah set up new records in under seventeen events for the 1500 and 800 metres race; R. Rajakumar set up a record in the under sixteen, 100 metres hurdles event and T. Murugadas set up a new record in the under thirteen Long Jump event.

The following were champions in the groups concerned:

Post Seniors: N. Jeyakumar.

Seniors: B. Ganeshan and M. Paramalingam.

Under 17: G. J. Jesurajah.

Under 16: S. Augustine.

Under 14: R. Sothilingam and R. Kulasingam.

Under 13: T. Murugadas.

Under 12: R. Ratchagan.

Senior Girls: A. Maria Vathany.

Inter Girls: S. Suntharavathany.

Under 14 Girls: J. Suganthini.

Under 13 Girls: K. Naveena.

Tug-of-War Champions: Hastings House.

Relay Champions: Hastings House.

Inter-House Champions: Hastings House.

*Don't miss this year*

**The Jaffna Christian Union ANNUAL CONVENTION**

**September 8 — 10**

at Trimmer Hall

Sermons & Kathaprasangam

by

Bagavathar

**Vethanayaka Sastriar**

of Madras, India.

## Tamil Minister on the Riots

Home Minister K. W. Devanayagam addressing the nation over the Radio said that the Tamil people who supported the government were the people who lost their properties in the riots.

It was the 1956 Language Policy of Mr. S. W. R. D. Bandaranayake which originated the race riots. Successive governments could not contain them. 'Pacts' were of no avail.

Even though the UNP government on coming to power in 1977 did something tangible and appointed even a Minister to deal with the problem pratical difficulties of finding sufficient personal to implement the policy fromed a great handicap.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 143 ] 5-8-83. 12-8-1983 [ இதழ் 31, 32


# அனைத்துலகத் திருச்சபை மாமன்றத்தின் ஆருவது மாநாடு

கனடாவிலுள்ள வன்கூவர் நகரில், அனைத்துலகத் திருச்சபை மாமன்றத்தின் ஆருவது மாநாடு, ஜூலை 24ஆம் நாள் துவங்கி ஆகஸ்ட் 10ஆம் நாள் வரை நடைபெற்றது. இம்மாநாட்டில் 300க்கு மேலான அங்கத்துவ திருச்சபைகளிலிருந்து, நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து, 3500 பிரதிநிதிகள் சமுகளித்தனர்.

இம்மன்றம், ஏழு ஆண்டுகட்கு ஒரு முறை உலகின் வெவ்வேறு பகுதிகளில், மாநாட்டை நடத்தி வருகிறது. மாநாட்டில் சமுகமளிக்கும் பிரதிநிதிகள் ஒன்று கூடி கடந்த ஏழு ஆண்டுகளாகச் செய்யப்பட்ட பணிகளைப் பரிசீலனை செய்து, அடுத்த பத்து ஆண்டுகளுக்கு செய்யப்பட வேண்டிய பணிகளைத் திட்டமிடுவதுண்டு.

இம்மாமன்றத்தின் முதல் மாநாடு அமஸ்ரடம் நகரில் 1948இல் நடைபெற்றது. இவன்ஸ்ரன் நகரில் 1954இல் இரண்டாம் மாநாடு நடைபெற்றது. 1961இல் புதுடில்லியில் மூன்ரும் மாநாடு நடைபெற்றது. சுவிடினில் உள்ள உப்சலா நகரில் 1968இல் நான்காவது மாநாடு நடைபெற்றது. நைரோபியில் 1975இல் ஐந்தாம் மாநாடு நடைபெற்றது.

இவ்வாண்டில் வன்கூவரில் நடைபெறும் ஆரும் மாநாட்டில், "இயேசு கிறிஸ்து உலகின் வாழ்வு" (Jesus Christ the Life of the world) என்ற பொருளை மையமாக வைத்து, இன்றைய சமுதாயத்தைத் தாக்கிவரும் பல்வேறு பிரச்சனைகளை ஆராய்ந்து, நிறைவான வாழ்வை வாழவேண்டுமெனத் தவிக்கும் மக்களுக்கு, கிறிஸ்து பெருமான் அளிக்கும் முழுவாழ்வை அடையும் வழிவகைகள் விளக்கப்படும்.

இன்றைய சமுதாயத்தில் வறியவர்களும், பெரும்பான்மையினரால் அடக்கி ஒடுக்கப்படுவோரும் நீதிக்காகவும் சமாதான வாழ்விற்காகவும் செய்துவரும் போராட்டங்களில், அவர்களுடன் திருச்சபையும் ஒன்று சேர்ந்து செயல்பட வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்திற்று.

நமக்கு வாழ்வளிக்க விரும்பும் ஆண்டவர் அனைவர்க்கும் இவ்வாழ்வு கிடைக்கவேண்டுமெனவே விரும்புகிருர். வாழ்வு அளிக்க விரும் அவரே எமது வாழ்வு, என்ற உண்மையை மக்கள் விரும்பி இவ்வாழ்வை நாட, திருச்சபை தம் பணிகளை ஏற்ற முறையில் செயற்படுத்த வேண்டுமென்பதே இம்மாநாட்டின் முடிவாகும்.

இன்று நாம் வாழும் உலகு பலவிதமான பிரச்சினைகளால் சிதைந்து கிடக்கின்றது. உலகின் மக்கள் பலவகைச் சக்திகளால் தாக்கப்பட்டுத் தம் உரிமைகளை இழந்து தவிக்கின்றனர். வெவ்வேறு சமயங்களுக்கிடையிலும், பலவித கலாச்சாரங்களின் நடுவிலும், அரசியல் அமைப்பு முறைகள் மத்திலும் நிலவியுள்ள கருத்து வேறுபாடுகளும் வெறுப்பு மனப்பான்மையும் நீங்குவதாகத் தெரியவில்லை.

இத்தகைய சூழ்நிலையில், உலகின் வாழ்வாகிய கிறிஸ்து பெருமான் நமக்களிக்கும் ஒருமைப்பாட்டைப் பற்றியும், திருச்சபை இந்த உண்மையை எவ்விதம் உலகிற்கு எடுத்துக்காட்ட வேண்டுமென்பதையும் இம்மாநாடு விளக்கியது

அன்புநெறி நின்று அனைத்து மாந்தர்க்கும் பணியாற்ற இறைவன் தங்களைப் பணித்துள்ளார் என்றும், இப்பெரும் பணியில் அனைவரும் பொறுப்புடன் பங்கேற்று செயல்பட இம்மாநாடு அனைத்து சபைகளையும் அழைக்கிறது.

இம் மாநாட்டில் சபைப் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டவர்கள், தத்தம் சபைகளில் மாநாட்டின் செய்தியைச் சபையார் புரிந்து கொள்ளத்தக்க முறையில் விளக்க வேண்டும். இயேசு கிறிஸ்து எந்தெந்தத் தடுப்புச் சுவர்களைத் தகர்த்தெறிகிருர் என்பதையும், யார் யாரை நம்முடைய அயலாராகக் காட்டுகிருர் என்பதையும் தெளிவாக உணர்த்த வேண்டும்.

இதனை இப்பிரதிநிதிகள் செய்யாவிடின், இத்தகைய மாநாடுகளால் சபையார் எவ்வித பலனையும் அடையமாட்டார்கள். நம் சபையார் தெளிந்த அறிவுடன கிறிஸ்து பெருமான் அளித்த முழுவாழ்வைப் பெற்றவர்களாக தம் அயலாரும் இவ்வாழ்வைப் பெற வேண்டுமென்ற வாஞ்சையுடன் இந்நாட்டில் பணியாற்ற இம்மாநாட்டின் செய்தி உதவும் என்பதே எம் நம்பிக்கை.

## செய்தி

● **மண்டைதீவு பஸ் சேவை**

அண்மையில் வடபகுதியில் போக்குவரத்து சேவையைக் குறைக்கு முகமாக நிறுத்தப்பட்ட மண்டைதீவு பஸ் சேவையைத் தொடர்ந்து நடத்துமாறு மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கம் வடபகுதி போக்குவரத்துச் சபையின் பணியாளரைக் கேட்டுள்ளது:

இந்த பஸ்சேவை நிறுத்தப்பட்டதால் மண்டைதீவு தபால் சேவையும் பொதுமக்களும் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

## தியானப் பகுதி

### வானத்திலிருக்கிற எங்கள் தந்தையே!

வேதப் பகுதிகள்:

மாற்கு. 9:33—37

ஏசாயா. 58:1—12.

"நீ கடவுளை அறிந்தவனுயிருந்தால் புதிர்களை விடுவிப்பவனாக இருக்க முடியாதே
மாருக, உன்னைச் சுற்றிப்பார்,
நீ அவரை உன் பிள்ளைகளுடன்
விளையாடுபவராகக் காண்பாய்."

—கலீல் ஜிப்ரன்.

கடவுள் நாம் எதிர்பாராத வேளைகளில் நம்மைச் சந்திப்பவர். நம்முடைய நம்பிக்கைக்கேற்ற வழிபடும் தலங்களுக்கு இறைவனைச் சந்திக்கும் எண்ணத்துடன் செல்கிருேம். பெரும்பாலும் அவரைச் சந்திக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பி வருகிருேம். ஆனல் சற்றும் எதிர்பாராத வேளைகளில் ஒரு பச்சிளங் குழந்தையின் சிரிப்பில் அவரைக் காண்கிருேம்.

ஏழை மக்களோடு மட்டுமின்றி, நாட்டின் அதிபதிகளோடும், அடக்கி ஒடுக்கப்படும் ஆண். பெண், பிள்ளைகளோடும், மரணத்தின் பிடியிலிருக்கும் முதியவர்களோடும், நோய்வாய்ப்பட்டவர்களோடும் அவர் பேசிக் கொண்டிருப்பதைக் காண்கிருேம்.

ஒரு நண்பனின் அன்பான வார்த்தையிலும், பரிதாபமான நிலையிலுள்ள ஒரு பிச்சைக்காரனின் செபத்திலும் கூட, அவருடைய குரலைக் கேட்கிருேம். பேரார்வத்துடனும் நம்பிக்கையுடனும் நாம் செயல்களைச் செய்யும்போது, அவர் எங்கள் உடன்பிறப்பினராய் நின்று துணை புரிகிருர்.

துயரப்பட்டு நம்பிக்கை இழந்திருக்கும் நிலையில் தாயும் தந்தையுமாய் நம்மைத் தேற்றுகிருர். நாம் அவரை அறிய வேண்டுமானல், இன்றைய வாழ்வின் அனுபவங்களில் அவரைக் கண்டறிய வேண்டும்.

மனுக்குலத் துயரத்திற்கு எளிதில் விளக்கம் கூறிவிடமுடியாது. மனுக்குலத் துன்பத்தைத் துடைப்பதற்கு நாம் உழைக்க அழைக்கப்பட்டிருக்கிருேம். அதைப் பற்றி விளக்கம் பெறவோ, மற்றவர்களுக்கு விளக்கிக் கூறவோ அல்ல. கிறிஸ்துவை நாம் தாயும் தந்தையுமாக ஏற்றுக்கொள்வதைப் பொறுத்தே, இந்தச் செயல் சிறப்படையும்.

(நன்றி: இறையரசே வருக!)

● **உங்கள் இருதயம் பற்றி அறியுங்கள்**

— உங்கள் உடலில் உள்ள தசைகளிலேயே மிகவும் உறுதி வாய்ந்த தசை இருதயம்.

— எந்த ஒரு செயற்கை இயந்திரத்தையும் விட செயலூரம் மிக்கது இருதயம்.

— இருதயம் தன்னுள்ளேயே பராமரிப்பு, மராமத்து முறைகளை அடக்கிக் கொண்டிருக்கிறது.

— அதிக உழைப்பைச் சமாளிக்கத் தேவையான சக்தியைத் தன்னுள்ளே தேக்கிக் கொண்டிருக்கிறது இருதயம்.

— இருதயம், உடலில் உள்ள ஒவ்வொரு சொட்டு இரத்தத்தையும், ஒரு நிமிட நேரத்துக்குள் தன்னுள் நிறைத்து வெளியேற்றுகிறது.

— இருதயம் 70 ஆண்டு காலத்துக்கு செப்பனிடத் தேவையில்லாமலும், விடாமல் இயங்கவும் கூடிய ஒரு மோட்டார் வண்டிக்குத் தேவையான சக்தியைத் தன்னுள் அடக்கியுள்ளது.

## செய்திகள்

● **பொருள் தட்டுப்பாடு**

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியின் விளைவாக கடந்த சில நாட்களாக அத்தியாவசியப் பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. விலைகள் திடீரென உயர்ந்துவிட்டது. செயற்கைத் தட்டுப்பாடு ஏற்படுத்தி கடை முதலாளிகள் கொள்ளை லாபம் சம்பாதிக்க முற்படுகின்றனர்.

● **முஸ்லிம் பாடசாலை ஆசிரியர்**

சமீபத்தில் நடந்த கலவரங்களினுல் இடம்பெயர்ந்து வந்துள்ள முஸ்லிம் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், தாம் வதியும் பகுதிகளிலுள்ள கல்வித் திணைக்களத்துக்குச் சென்று அறிவிக்க வசதி செய்யப்பட்டுள்ள இத்தகவலை இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. மகாசிவம் தெரிவித்தார்.

● **எரிபொருட்கள் யாழ். வந்து சேர்ந்தன**

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவின் அவசர வேண்டுகோளைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திற்கு எரிபொருட்கள் தொடர்ந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

● **வவுனியாவில் அகதிகள் முகாம்**

கொழும்பு, கண்டி, மற்றும் பல இடங்களிலிருந்து தனியார் பஸ்கள் மூலம் வவுனியா வரை வந்து சேரும் அகதிகளுக்கு, வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் அகதிகள் முகாம் ஒன்று இம்மாதம் 10-ம் திகதி அமைக்கப்பட்டது.

● **பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி**

யாழ். மாவட்டத்தில் வந்துள்ள அகதிகளுக்கு வேண்டிய உதவிகள் அளிப்பதற்கு பொருட்களையும் பணத்தையும் தந்து உதவும்படி, C.S.I. யாழ். திருமண்டலத்தின் பேராயர் அருட்பெருந்திரு. டி. ஜே. அம்பலவாணர் எல்லாச் சபைகளுக்கும் குருமாருக்கும் ஒரு சுற்று நிருபம் அனுப்பியுள்ளார்.

● **பணம் மகிழ்ச்சியைத் தருமா?**

ஒரு வீட்டின் மேல் மாடியில், ஒரு பணக்காரனும், கீழ்ப் பகுதியில் ஒரு ஏழைத் தையற்காரனும் வசித்து வந்தனர். தையற்காரன் துணிகளைத் தைக்கும்பொழுது, பாடிக் கொண்டிருப்பது வழக்கம். இவன் பாடும் பாட்டு, நன்ருக வயிறு நிரம்பச் சாப்பிட்டுவிட்டுத் தூங்கும் பணக்காரனுடைய தூக்கத்தைக் கெடுத்தது.

எனவே, பணக்காரன் தையற்காரனுக்கு ஒரு பை நிறையப் பணம் கொடுத்து, அவனைப் பாடாமல் இருக்குமாறு கேட்டுக் கொண்டான். இப்பொழுது, தையற்காரன் பணக்காரனுகிய படியால், தன்பாட்டை நிறுத்தி விட்டான்.

சில நாட்கள் கழித்து, தையற்காரனுக்குத் தன்வாழ்வில் சலிப்புத் தட்டியது. அதனுல் அவன் பணக்காரன் தனக்குத் தந்த பணத்தை எடுத்துக்கொண்டு போய், மேல் மாடிக்குச் சென்று. பணக்காரனிடத்தில் கொடுத்து விட்டு, "ஐயா, இதோ நீங்கள் தந்த பணம், இதை எடுத்துக் கொள்ளுங்கள். நான் பழையபடி பாடத்தான் போகிறேன். பாட்டு இல்லாமல் எனக்கு வேலை ஓடாவே இல்லை" என்ருன்.

பணம் மட்டும் இருந்தால், மகிழ்ச்சியுடன் வாழலாம் என்று நினைப்பது தவறு. இறைவனுடன் இணைந்து வாழ்பவனின் உள்ளத்தில் இசை எழும்பும். அவன் இதயத்திலிருந்து மகிழ்ச்சிக் கீதங்கள் தொனிக்கும்.

## FURTHER EDUCATION FOR GIRLS

பெண்களுக்கான சிறப்புக் கல்வி

1983-ம் ஆண்டு புரட்டாதி மாதம் உடுவில் மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகும்.

வகுப்புகள் கிழமைநாட்களில் மு. ப. 9 மணி தொடக்கம் பி. ப. 4 மணி வரை நடாத்தப்படும்.

நடாத்தப்படும் வகுப்புகள் பின்வருவனவாகும்

1. பிரத்தியேக ஆங்கில வகுப்புகள் — இதில் மேல்நாட்டு சங்கீத. ஆங்கில ஆசிரியர் சபையினால் நடாத்தப்படும் சங்கீதம் பேச்சு போன்ற பரீட்சைகட்கு மாணவரை ஆயத்தம் செய்தல்.
2. மேல்நாட்டுச் சங்கீதம் — வாத்தியங்கள்;
3. கணனி விஞ்ஞானம் — (கொம்பியூட்டர்)
4. மனையியல்
5. தட்டச்சு சுருக்கெழுத்து (Pitman)
6. கீழைத்தேச சங்கீதம் — வாய்ப்பாடல்.
7. வீணை.
8. வயலின்.
9. பரதநாட்டியம்.

6 — 9 வரையுள்ள பாடங்களுக்கு மாணவரை வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்தல்.

10. க. பொ. த. (உயர்தர) விஞ்ஞான வகுப்புகள்.
11. க. பொ. த. (உயர்தர) வர்த்தக வகுப்புகள்.

விண்ணப்பங்கள் ஆவணி 27-ம் திகதியுடன் முடிவடையும். குறிக்கப்பட்ட தொகையினருக்கே இடம் கிடைக்குமாதலால் நேரத்தோடு விண்ணப்பிக்கவும்.

குறிப்பு :— விடுதி வசதி உண்டு
விண்ணப்பப் பத்திரங்களை உடுவில் மகளிர் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

R. J. Mann
திட்ட அதிகாரி

---

## உலகம் உனதே

Rudyard kipling அவர்கள் எழுதிய "If" என்ற பாடலின் தமிழாக்கம்
ஆக்கியோன் : எஸ். ஜெபநேசன்

1. அகிலம் முழுவதும் சிந்தை கலங்கி
குற்றம் உனதே என்று கூறிட
குழப்பம் இல்லாச் சிந்தையன் ஆகி
நானிலம் எல்லாம் எண்ணி நகைக்கவும்
நாணம் இல்லா நடை நெறிதாகி
நகைப்பார் நகையையும் கணித்துக் கொண்டு
களைப்பி ல்லாமற் காத்து இருந்து
வஞ்சக உரைகளை நஞ்சர் உரைக்கவும்
பொய்யுரை தனளைத துறந்த வனுகி
வெறுப்பார் வெறுக்கினும் வெறுப்பினைத் தணித்து
பெருமகன் கோலமும் ஞானி போன்ற
பேசும் பேச்சும் நீக்கி வாழ்ந்தால்

2. கனவு காணினும் கனவில் வாழ்ந்திடா
நினைத்துப் பார்க்கினும் நினைவில் அமிழ்ந்திடா
சகடக் கால்போல் உருண்டு வந்திடும்
வெற்றி தோல்வி மாயை இரண்டையும்
ஒக்க நோக்கும் அருந்திறல் உடைத்தாய்
வஞ்சனை நெஞ்சினர் நீசெப்பிய மொழியை
மூடர் தமக்குச சூழ்வினை யாக்க
திரித்துக் கூறிடப பொறுத்துக் கேட்டு
வாழ்நாள் எல்லாம் செருப்பாய் உழைத்து
எழுப்பிய கோட்டை எரிந்திடக் கண்டும்
சிதைந்து போன கருவிகள் கொண்டு
திரும்பக கட்டிடக் குனிவாய் ஆகில்.

3. ஈட்டிய வெற்றிகள் அனைத்தையும் திரட்டி
ஒருகணப் பொழுது ஆட்டம் அதனில்
பகடக் காயாய் வைத்து இழந்தும்
போனவை பற்றி மூச்சும விடாது
திருப்பத் தொடங்கும் திடமனத் தினனாய்
சிந்தை சக்தி தோள்கள் எல்லாம்
சோர்ந்து விழுந்து கெஞ்சும் பொழுதும்
போதும் என்று குமுறும் பொழுதும்
இன்னும சற்று உழைப்பு நல்கென
உள்ளம் மட்டும் உந்தித தள்ள
எடுத்த காரியம் தொடுத்து முடிக்க
அவைக்கு ஊக்கம் அளித்துக் காப்பாயாகில்

4. திரண்ட மக்கள் கூட்டம் அதனில்
பேசிப் பழகினும் பண்பு குலையா
முடியுடை வேந்தர் தம்முடன் நடந்தும்
பாமர மக்கள் சால்பினைப் பிரியா
மாற்றார் ஆகினும் இனியவர் ஆகினும்
உறுத்து வதுணரா மனத்தி னனாகி
அனைத்து மக்களின் அவசியம் அறிந்து
மன்னிப் பறியா மணித்துளி யதனில்
அறுபது கணத்தின் கருமம் நிரப்பின்
அருமை மைந்த உனதே அகிலம்
உலகின் சிறப்பு அனைத்தும் உனதே
அதற்கும் மேலாய் இன்னும் உண்டு
மனிதன் நீயே அறிவாய் மகனே.

---

## சுகவாழ்வு அளிக்கும் நலம் தரும் கீரைகள்

(டாக்டர் S. S. முரளிதர்-ஈரோடு)

கீரைகள் இறைவன் திருவருளால் நம்மனைவர்க்கும் கிடைத்துள்ள ஈவாகும். கீரையின் தனிச் சுவை மிகுதியானது. பலவகையான நோய்கள் வராமல் தடுக்கும் சக்தி கீரைகளுக்கு உண்டு. நோய் வந்தால், நலம் தரும் கீரைகளுள் முட்டைக் கோஸ் (கோவா) கீரையும் ஒன்றாகும்,

நலம் தரும் பலவகைக் கீரைகளை நாம் அருந்துவதால், வாத நோய், காமாலை, இரத்தத்தில் அமிதமான கொழுப்புச் சத்து, மூத்திர நோய்கள், உடலில் உப்புச் சத்து ஆகிய பலநோய்கள் குணமாகும்.

**தன்மைகள் :**

கீரைகளை உணவாக உபயோகிப்பதால், இயல்பான குணங்களே மனித சுபாவத்தில் தோன்றுகின்றன. மாமிசத்தை உண்பதிலும் பார்க்க, கீரைகளை நாள்தோறும் உண்பதினால், நமது உடலில் தோன்றும் சக்தி, நம்மை நீண்ட ஆயுளுடன், நல்ல சுகத்தோடு பாதுகாக்கின்றது. நமது உடல் உறுப்புக்கள் யாவும், இயற்கையான முறையில் செயலாற்றச் செய்கின்றது. நோய் அணுகாது.

**மலச் சிக்கல் நீங்கும் :**

உடலில் நோய் தோன்றுவதற்கு முதல் காரணம் மலச்சிக்கல். கீரைகள் உண்பதால், மலச் சிக்கல் நீங்கி, குடலில் உற்பத்தியாகும் பூச்சிகளைத் தினம் உடலைவிட்டு வெளியேற்றி, நோய் வராமல் நாம் பாதுகாக்கப்படுவோம். உண்ணும் உணவில் உள்ள குறைபாடுகளை நீக்கி, உடலுக்கு வேண்டிய சக்தி அளிக்கப்படும்.

கீரைகளில் வைட்டமின் C, இரும்பு, சுண்ணாம்புச் சத்தும் உண்டு. அதனால், வாதநோய், காமாலை, கொலஸ்திரமல் இரத்தக் கொதிப்பு, மூத்திர வியாதிகள், உப்புச்சத்து போன்ற நோய்கள் குணமாகும்.

**அகத்திக் கீரை :**

இதில இரண்டு வகையுண்டு. ஒன்று செவ்வகத்தி, அடுத்தது சீமை அகத்தி. இக்கீரை உடலுக்கு மிகவும் நல்ல குளிர்ச்சி ஊட்டும். பித்த சாந்தி அளிக்கும். மலமிளகச் செய்யும். உணவை செரிக்கச் செய்யும். சொறி, சிரங்கு, போன்ற நோய்களைப் போக்க, இந்தக் கீரையை அரைத்து உடலின்மேல் தேய்த்தல், குணமடையலாம். மருந்துகளின் சக்தியை முறியடிக்கும் தன்மையும் இக் கீரைக்கு உண்டு.

**அரைக்கீரை, சிறுகீரை :**

இவை பத்தியத்திற்குச் சிறந்தவை. வாத நோய், நடுக்கங்களுக்கும் நல்லது. உடலிலுள்ள தாதுக்களை வளர்க்கப் பயன்படுகின்றன. இருதயத்திற்கு இவை நல்ல பலன் தரும். அரைக் கீரைத் தைலம் தலைமயிர் வளரப் பயன்படுகின்றது. காச நோயைக் குறைக்கும் சக்தியும் இவற்றிற்கு உண்டு பித்தத்தையும் போக்கும்.

**கொத்தமல்லிக் கீரை, பொதினாக் கீரை :**

பித்தம், வாந்தி, விக்கல், முதலிய குணங்கள் தோன்றினால், அவற்றைப் போக்கும் சக்தி வாய்ந்தன. இரத்தக் கொதிப்பை அதிகரிக்காமல், குறைக்கும் சக்தி உண்டு. மூளைக்குப் பலம் தரும். செமியாத தன்மையைப் போக்கி, வாய்வுத் தொல்லையை நீக்கும்.

**காசினிக் கீரை :**

இரத்த சுத்திக்கும், உடல் வெப்பத்தைப் போக்கவும் இது பயன்படும்,

**அதிக் கீரை :**

இக்கீரையைத் தொடர்ந்து சாப்பிட்டால், எந்த விதமான மூல நோயும் குணமடையும். இதனை ஆமணக்கு எண்ணெயில் வதக்கி வெளிப்புறத்தில் வைத்துத் தொடர்ந்து கட்டினால், மூல நோய் திட்டமாகக் குணமாகும்.

மணத் தக்காளிக் கீரைக்கும் இதே சக்தியுண்டு. வாய்ப்புண், குடல்புண் முதலியவைகளைக் குணமாக்கும் தன்மை இதற்கு உண்டு.

**பசலைக் கீரை :**

இது சூட்டைத் தணிக்கும். குளிர்ச்சியளிக்கும், மூத்திரத்தைப் போக்கி, மூத்திரக் கடுப்பை குணப்படுத்தும். மேக நோயைப் போக்க வல்லது. மலத்தை இளகச் செய்யும். இதில் A, B, C உயிர்ச் சத்துக்கள் மிகுதியாக உள்ளன. தடுமல் உள்ளபோது இதனைச் சாப்பிடக் கூடாது.

**புளிச்சக் கீரை :**

உடலுக்கு நல்ல பலன் தரும். நரம்புகளின் சக்தி தோன்றும். வாதநோய், சரப்பான் முதலியன குணமாகும்.

**பொன்னாங் கண்ணிக் கீரை :**

இது நல்ல உணவு. கண்ணுக்கு மிகவும் நல்லது. தேகச் சூடு, மூலநோய் ஆகியன குணமாகும். உடலில் இருக்கும தாதுக்களை வளர்க்கப் பயன்படும். இதைச் சாப்பிட்டால், இரத்த விருத்தி தோன்றும் உடல் நல்ல பலத்தைப் பெறும்.

**முருங்கைக் கீரை :**

இது, தாது விருத்தியை உண்டாக்கும. இல்லற இன்பத்திற்கு நல்லது. இதில் E, K போன்ற வைட்டமின்கள் உள்ளன. இனப் பெருக்கம் செய்ய உதவும்.

**மஞ்சள் பூ கரிசலாங் கண்ணிக் கீரை :**

இது ஓர் அற்புதமான மூலிகை. இதற்கு நிகரான கீரையே இல்லை. ஈரல் வியாதிக்கும், காமாலை சோகை, மகோதரம் முதலிய நோய்களுக்குக் கைகண்ட கீரை. இரத்தத்தையும் சுத்தி செய்யும், பித்தத்தையும் நீக்கும்.

இதைத் தொடர்ந்து சாப்பிட்டால், உடல் இரும்புபோன்று வலிவு பெறும். அயச்சத்து நிரம்ப உளளது. கரிசலாங்கண்ணித் தைலம், கண்களுக்கும் மூளைக்கும நல்ல வலிமை தரக் கூடிய மருந்தாகும். இந்தத் தைலம் செய்யுமமுறை வைத்திய ரின் மேற்பார்வையிலேதான செய்யப்பட வேண்டும்.

**வெந்தயக் கீரை :**

வயிறு சம்பந்தமான கோளாறுகளை, உடலில் உள்ள சூடு, எரிச்சல தன்மை முதலியவைகளை நீக்கும. இருதயத்திற்குப பலம தரும. மலக் குடல், மூத்திரத் தாரைகளில உண்டாகின்ற சூடு, புண், எரிச்சல் ஆகியவை நீங்கும.

நீண்ட ஆயுளுடன், உடல் நலமுடன வாழும மனிதனைக் கண்டு, 'உங்கள் வாழ்வின் சிறப்பிற்குக காரணம் என்ன?' என்று கேட்டால, 'நான மாமிச உணவு உட்கொள்ளாமல் கீரைகள், காய்கறிகளை அதிகமாக உபயோகிப்பதாலதான' என்று சொல்லுவார்.

உங்கள் பகல் உணவைக் கீரைகளுடன அவசியம் உண்ண வேண்டும், புத்தம் புதிய கீரைகளைச் சமைத்து அன்றே உண்ண வேண்டும. பழைய கீரைகளைப் பாவிக்க வேண்டாம். "இலை அமுது" என்று மதிப்புடன் கூறப் படும கீரை வகைகளைத் தொடர்ந்து சாப்பிடுங்கள். ஏழைகள் அதிகமாகக் கீரை வகைகளைச் சாப்பிடுவதால்தான், நோயின்றி சுகவாழ்வு வாழகின்றனர்.

*EDITORIAL*

## The Refugees Arrive

Some twenty five thousand Tamil refugees out of an estimated 52,000 in the riot-torn city of Colombo and its suburbs, are continuing to arrive in Jaffna by ship after being adrift in the sea of politics which became particulary 'stormy' in the country during the week July 24 — August 1.

The government has to be commended on the prompt measures that have been taken not merely to send back the refugees home in safety but to ensure that everything possible would be done to see that the damage they suffered would be, at least in some measure, made good.

The legal steps that have been contemplated by the State to prevent any kind of exploitation of the situation by unscrupulous landlords to eject Tamils and the larger Scheme envisaged of bringing back into active operation the Industrial plants (extensively damaged during the riots to the time of some 200 million rupees) are evidence of the desire of the government to see that that those who have become 'refugees' cease to be 'refugees' within a reasonable time.

The government has also promptly and wisely acted in inviting the global community to oil the wheels of humanitarian relief mechanisms.

The Government Agent of Jaffna, Mr. Devanesan Nesiah is to be commended on the extremely tidy and efficient manner in which the task of handling the vast hordes of refugees, has been handled, especially those who suffered the rigours of a ship journey mainly in cargo vessels.

The old and the infirm, the lone and the lost, mothers with sucklings in their arms have all found on their arrival at Kankesanthurai a haven, where every effort was made by the Government Agent and an overworked staff of government officials and volunteers to get them (the refugees) to their homes with the least possible delay and least measure of strain.

All refugees in the camps in the city will be evacuated in another week according to informed sources, with the train service too resuming normal operation.

'What next?' is a question in everyone's lips. Preventive action to the problem lies in the larger realm of maintaining political stability, peacefully resolving disputes, recognising human rights and ameliorating the preconditions of violence — all obviously long term prospects.

But one thing is certain. The scale, the complexity and persistence of the Tamil problem here in Sri Lanka calls for a large measure of co-operation on the part of *all communities* in the country at all levels.

A lasting solution must be found. But in the meanwhile, the immediate impact of the riots on the lives of the people — be they Tamils or Indians — should not be allowed to become more devastating than the crisis they fled.

## Corrie Ten Boom dies

Corrie Ten Boom, the Dutch war-time heroine who saved the lives of hundreds of Jews whom she hid in her home at Haarlem, died at Placentia, California, on April 15 — her 91st birthday.

Miss Ten Boom was already 50 when the Nazi occupation of Holland shattered the peaceful life she had led with her father and sister above their watch shop. The family at once began to provide persected Jews with hiding places, but eventually they were betrayed and sent to Ravensbruck Concentration Camp, where Corrie's father, sister and brother died and a nephew disappeared.

It was only a clerical error which saved Corrie herself from execution. After her release in 1945 she dedicated herself to travelling the world, inspiring thousands with her stories of the triumph of God and the human spirit over the horrors she had seen in the death-camp.

When she retired at the age of 85, it was to devote herself more fully to her other work of writing books and making films. Her eighteen books have sold more than seven million copies; and one of the bestloved of them, The Hiding Place — which was her autobiography — was made into a film in 1975.

— *Church Times.*

## <u>*In brief*</u>

- *The number of civilians killed in Jaffna* after July 23 is twentyfour according to the State Ministry Secretary.
- *Finance Minister Ronnie de Mel* has appealed to Sri Lanka's Banking community for Rehabilitation assistance which was estimated at about Rs. 4,000 million.
- *The damaged to Induitrial Plants* by the riots in Sri Lanka (July 24 to August 1) is in the region of Rs. 200 million. 64 industrial establishments were damaged, more than half of which were textile production centres.
- *The value of loot* recovered so far by the police is $2\frac{1}{2}$ million rupees.
- *The number of High Court Judges* has been increased from 16 to 30 to meet the new demands made on the Judiciary.

*Letter to the Editor*

## The Concept of Transcendence

I have read with interest the book on "The Concept of Transcendence" written by Bishop Kulendran. He dwells at length on the concept of transcendence in the four major religions namely Hinduism, Buddhism, Islam and Christianity. He quotes profusely from western authors. From the beginning I was only concerned whether the material he is providing is lifting me up in my consciousness 'to be in Christ'.

We are today living in a world of ideation where the intellect is free to manufacture ideas. The Bishop's quotations may be factual but facts are not necessarily spiritual.

We are also living at a time when it has become necessary for man to differentiate between religion and spirituality. It is not all religious people who are spiritual. Religion belongs to this world but spirituality is not of this world. Man has entered the Spiritual Age and we find this amply manifested in every religion.

For the purpose of this article and the interest of my readers I am confining myself to Hinduism and Christianity.

**Hinduism**

The three schools of thought of Hinduism namely Dwaita (Dualism), Vishita Adwaitha (Qualified Monism) and Adwaitha (Monism) have been extensively dealt with by the Bishop. The three schools seem to be widely apart. Contrasting and contradicting each other. Yet the three exponents claim to have derived their philosophies from the Vedas. Each has interpreted the Vedas in his own way. Each one is trying to prove his point of view. It is like the story of the drunken Muslim who supported alchol drinking on the authority of the Koran. The Koran states 'You drink wine and you are sure to go to hell'. The drunkard stuck only to the first portion of this sentence, 'you drink wine'. There is no use in relying on authorities. God has given every man an intellect to make use of. You will have to interpret the Vedas yourself. Make use of the views of great men. But arrive at your own conclusions.

The Bishop deals with the Mahavakyas (Great Sayings). According to the Hindu scriptures there are only four Mahavakyas. The Bishop has quoted only two of them correctly, namely Aham Brahma Asmi (I am Brahman) and Tat Twam Asi (Thou art That). Ekam eva avitiyam (Indeed it is all one) is not considered as a Mahavakya. He has omitted the first important Mahavakya which states Pragnanam Brahma (Consciousness is Brahman). This is taken from the Aitreya Upanishad in the Rig Veda. It declares that the Consciousness (Atman) which pulsates in an individual and gives sentinency to the matter layers is the same as the supreme Reality behind the entire Universe. In short the one and the same Consciousness acts as the common subsratum for both the microcosm and macrocosm. For example, electricity functioning in a small bulb is the same as that which functions in all the electric bulbs, gadgets, machines and other contrivances in the entire world. Electricity is like Consciousness, one homogenous power through its manifestation may be different and varied.

This statement-divine is an objective definition of the highest Truth. It merely declares 'Consciousness in each bosom is the Brahman, the total Consciousness'. This definition is a general indication to all seekers that if any one of them should experience the Consciousness within him, he will at once be experiencing the infinite Brahman (total Consciousness). Is this not precisely what Christ meant when He taught and said that the Kingdom of God is within you?

Even Moses knew that life is Consciousness and only the very very few, the very elect among the human race have known this until Jesus came and taught it to the people. Moses knew it. Abraham knew it. Gautama Buddha knew it. The very elite of the early Hindu teachers knew it and though they did not keep it a secret but gave it to their students, yet the students could not understand it. Jesus tried to teach it to the twelve Apostles and not one of them caught it until the day after the Penticost. They had the word but not the understanding of the thing.

Dealing with Tat Twam Asi, the Bishop has stated 'Thou art That'. This is misleading because the correct version is 'That Thou Art'.

(*to be continude*)

## M. A. in Theology

We are happy to report that the Rev. Kingsley T. Muttiah of the Methodist Church of Ceylon who has been away in England following a two years post graduate course at the University of Hull has obtained the M. A. degree in Theology from the University. He was granted his degree at the graduation ceremony which was held at the Hull City Hall on the 8th of July.

## Helping the Displaced

According to figures compiled by the Commissioner of Labour, in Sri Lanka, a total of 18,040 persons have been thrown out of employment in the Colombo district. Of these 12,505 workers are from 64 factories damaged in and around Colombo. 5535 workers are from 1101 shops which have been gutted.

Outside Colombo, 456 persons have lost their jobs.

The Labour Department is moving in the matter of providing all employees their July salaries as a first step to rehabilitate the displaced persons.

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. QB./59/300/26/82.*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 12th August 1983 and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna.